பத்திரிக்கை செய்தி

பட்டா பெயர் மாற்றம் செய்ய லஞ்சம் பெற்ற வழக்கில் அப்போதைய கிராம நிர்வாக அதிகாரி, மொளச்சூர் கிராமம், ஸ்ரீபெரும்புதூர் தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டம் அவர்களுக்கு 4 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டணை மற்றும் அபராதம் ரூ.10,000/- விதித்து தீர்ப்பு

புகார்தாரர் திரு.முருகன், மொளச்சூர் கிராமம், திருப்பெரும்புதூர் தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் தனது தந்தையின் பெயரிலிருந்து தனது பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்ய மொளச்சூர் கிராம நிர்வாக அலுவலகத்தில் விண்ணப்பித்துள்ளார். விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து மேல்நடவடிக்கை எடுக்க திரு.பாஸ்கரன், கிராம நிர்வாக அதிகாரி, மொளச்சூர் கிராமம், திருப்பெரும்புதூர் அவர்கள் தனக்கு ரூ.5,000/- லஞ்சமாக தர வேண்டும் என கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை காஞ்சிபுரம் பிரிவில் கடந்த 16.03.2015ம் தேதி புகார் கொடுத்துள்ளார். புகாரின்பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 16.03.2015ந் தேதி திரு.பாஸ்கரன், கிராம நிர்வாக அதிகாரி புகார்தாரரிடம் லஞ்சப்பணம் ரூ.5,000/- பெற்றபோது கைது செய்யப்பட்டார். இவ்வழக்கானது காஞ்சிபுரம் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இவ்வழக்கில் இன்று 26.11.2025 இவ்வழக்கில் திரு.பாஸ்கரன், கிராம நிர்வாக அதிகாரிக்கு ஊழல் தடுப்பு சட்டம் 1988, பிரிவு-7ன்படி 4 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டணையும், ரூ.5,000/- அபராதமும், பிரிவு 13 (2) r/w 13(1)(d) of PC Act படி 4 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டணையும், ரூ.5,000/- அபராதமும் விதித்து ஏககாலத்தில் அனுபவிக்க தீர்ப்பு வழங்கப்பட்டது.